**பாடசாலை மற்றும் கல்வியியல் கல்லூரி நூலகங்களில்**
**"ஒக்டோபர் – தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்.**

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்குரிய தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்** மற்றும் **விசேடமான செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல பாடசாலை மற்றும் கல்வியியல் கல்லூரி நூலகங்களிடம் கோரப்பட்டுள்ளன. "**உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே**" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு தேசிய வாசிப்பு மாத திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## 02. செயற்திட்டக் குழு

தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக தேசிய வாசிப்பு மாத செயற்திட்டக்குழுவை நியமிப்பது மிகவும் பொருத்தமானது. தற்பொழுது நூலக்குழு ஒன்று காணப்படுமானால் அக் குழுவின் மூலமும் வாசகர் சமூகத்தின் ஒத்துழைப்புடனும் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

- பீடாதிபதி / அதிபர் / உப அதிபர் - குழுத் தலைவர்
- நூலகர் / ஆசிரிய நூலகர் / நூலகப் பொறுப்பாளர் – குழுச் செயலாளர்
- பீடாதிபதி / அதிபரால் பரிந்துரைக்கப்படும் இரண்டு ஆசிரியர்கள்
- ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் இருவர்
- மாணவப் பிரதிநிதிகள் இருவர்

## 03. நடைமுறைப்படுத்தக்கூடிய விசேடத் திட்டங்கள்

- பயனுள்ள மற்றும் செயற்திறன் மிக்க இணையம் அணுகலுக்கும் கல்வியியல் தொடர்பான அதிகாரபூர்வ தகவல்களை அணுகுவதற்கும் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
- இதுவரை நூலகத்துடன் இணையாத மாணவர்களைக் கண்டறிந்து அவர்களை இணைக்கக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்தல்.
- மாணவர்களின் படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வடிமைப்புக்களைக் கொண்ட சஞ்சிகைகள் மற்றும் சுவரொட்டிகளை வெளியிடல்.
- வாசகர் மற்றும் கற்றல் வட்டங்களை உருவாக்குதல்.
- தொனிப்பொருள் தொடர்பான பல்வேறு வாசிப்புப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- தகவல் கல்வியறிவு மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- வாசிப்புச் சமூகத்திற்காக வாசிப்பு தொடர்பான விசேட செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- நூலகங்களுக்கு இடையேயான கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- நூலக முகநூல் பக்கத்தின் (Facebook) ஊடாக பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பாக பிரச்சாரம் செய்தல்.
- நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றிய தகவல்களை இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals) மற்றும் அவற்றை எவ்வாறு அடைவது குறித்து மாணவர் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சிறுவர்களின் இரசனையை அதிகரிக்கும் பொருட்டு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல்.
- நூலகத்தின் சிறந்த வாசகரைத் தெரிவு செய்தல்.
- வீட்டு நூலகங்களை ஆரம்பிக்க மாணவர்களை ஊக்குவித்தல்.
- சமூகத் தகவல் சேவைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
- பிற ஆக்கப்பூர்வமான வாசிப்பு ஊக்குவிப்புச் செயற்திட்டங்களை நடத்துதல்.

## 04. நிதி

இதனை முன்னிட்டு பாரியளவில் நிதியை உபயோகப்படுத்தத் தேவையில்லை. தேவைப்படும் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதி மூலமோ அல்லது நூலகத்தின் நிதி மூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.

## 05. அறிக்கை தயாரித்தல்.

மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையினை பீடாதிபதி / அதிபரின் சிபாரிசுடன் **2025 பெப்ரவரி 28** ஆந் திகதிக்கு முன் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல 14, சுதந்திர வழி, கொழும்பு 07** எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

வெற்றிபெறும் நூலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையாகக் கருதப்படும் அறிக்கையினைத் தயாரிக்கும் போது மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்கள் உட்பட வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்டத் திட்டங்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும் முறை பின்பற்றப்படுகிறது. மொத்த புள்ளிகளில் 75% நூலகம் நடத்தும் வாசிப்பு ஊக்குவிப்புத் திட்டங்களுக்கும் 25% புள்ளிகள் பிற சமூகத் திட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது.

அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடத் தேவையில்லை. நூலகத்தால் தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை **தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆதாரங்களுடன் முன்வைத்தல்** போதுமானதாகும்.

## 06. மதிப்பீடு

தேசிய வாசிப்பு மாதம் 2024 இல் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2025 ஆம் ஆண்டு இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது விருதுகளும் சான்றிதழும் வழங்கப்படும். வெற்றிபெறும் நூலகங்கள் மற்றும் பாராட்டப்படும் நூலகங்கள் தொடர்பில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

பேராசிரியர் நந்த தர்மரத்ன
தலைவர்

Professor Nanda Dharmarathna
Chairman
National Library and Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 0112-688855
தொலைநகல் – 0112-685201
மின்னஞ்சல் – libdev@mail.natlib.lk இணையத்தளம் - www.natlib.lk